**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 100/2025.**

**வழக்கு சாட்சி – அ.சா. 3.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. திருமூர்த்தி | ஜாதி | |
| தந்தை பெயர் | மாணிக்கம். | தொழில் | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர். |
| கிராமம் | கருவேல்நாயக்கன்பட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 52/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.04.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2, 3, 4 ஆகிய எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக பிரிவு 355 BNSS–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, பி.சி. பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் காவல் நிலையத்தில் ஏற்கனவே பணிபுரிந்த சார்பு ஆய்வளார் திருமதி.மலரம்மாள் என்பவரது கையெழுத்து எனக்கு நன்கு பரிச்சயம் என்ற அடிப்படையிலும் வழக்குக் கோப்புக்களின் அடிப்படையிலும் நான் சாட்சியமளிக்கிறேன். கடந்த 02.11.2024–ம் தேதி, சார்பு ஆய்வளார் திருமதி. மலரம்மாள் அவர்கள் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, க.விலக்கு அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று, அங்கு சிகிச்சையில் இருந்த சுருளி என்பவரை விசாரித்து, அதன் தன்மைக்கு ஏற்ப, பி.சி. பட்டி காவல் நிலையக் குற்ற எண். 446/2024, சட்டப் பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் வழக்குப் பதிவு செய்துள்ளார். **மேற்படி காவல் உதவி ஆய்வாளர் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர், 02.11.2024–ம் தேதியன்று மதியம் 12.00 மணிக்கு சம்பவயிடம் சென்று, சாட்சிகள் ராம்குமார் மற்றும் சொக்கர் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி

வரைபடம் தயாரித்துள்ளார். **அவர் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகக் குறியீடு செய்யப்படுகிறன**. பின்னர், சம்பவயிட சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளையும் மற்றும் மகசர் சாட்சிகளையும் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர், இவ்வழக்கில் காயம்பட்ட வாதிக்குச் சிசிச்சை வழங்கிய மருத்துவர் திருமதி.வீரலட்சுமி அவர்களை விசாரித்து, வாக்குமூலம் பதிவுசெய்து, காயச் சான்று பெற்றுள்ளார். **அந்த காயச் சான்று அ.சா.ஆ.6 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர், வழக்கின் சம்பவம் உண்மையெனத் தெரியவந்ததால், எதிரிகளைத் தேடிவந்தபோது, எதிரிகள் மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், தேனியில் முன்பிணை பெற்றுவிட்டபடியால், அவர்களை கைது செய்யவில்லை. அதன்பின்னர், இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து, எதிரிகள்மீது சட்டப் பிரிவுகள் 329(4), 296(b), 118(1), 351(3), 118(2) BNS–ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

அ.சா.1–டம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு, வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்கள் பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்துத் தயாரிக்கப்பட்டது என்றாலும், வழக்கின் எந்தவொரு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், எதிரிகளுக்கு எதிராக தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.01 16:34:16 +0530

நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),
தேனி.